# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்)

***(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத்***
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் 2019, செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, யூன் மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***296 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அவ்வாசகத்தின் சட்டப்பயனானது, விசா ஒன்றின் காலப்பகுதியை அதிகரிப்பதற்கும் நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதியை அமைச்சர் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்குமாகும்.*

*ச.வ.- ஓ 24/2018*

## *(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1.*** *இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-* *351 ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "இரண்டு ஆண்டுகளை," என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து ஆண்டுகளை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;*

*(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்தாண்டுகளை விஞ்சாத ஆனால் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய," என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாண்டுகளை விஞ்சாத ஆனால் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்*

*(3) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் -*

*"(3அ) (அ) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதி அமைச்சரினால் தீர்மானிக்கப்படலாம்.*

(ஆ) பந்தி (அ)இன் நோக்கத்துக்காக, "நிரந்தர வதிவிட விசா" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட விசா ஒன்று எனப் பொருள்படும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***3***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.